Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 59 of 2022**

Deposition of ....... witness for ................. Prosecution........**P.W.5**

Defence

Court

| | |
|---|---|
| Name | **கந்தவேல்** |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | **இந்து** |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Wednesday the 8th day of October 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Wednesday the 8th day of October 2025.**

**2 வது எதிரி இறந்து விட்ட காரணத்தினால் குற்றம் அற்றுபோய் விட்டது. 3 வது எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.**

**முதல்விசாரணை**:

நான் பண்ருட்டி, திருவதிகை கிராமத்தில் வசிக்கிறேன். நான் கோவில் சுதர் வேலை செய்கிறேன். ஆஜர் முதல் எதிரி ஞானவேல் மட்டும் எனக்கு தெரியும். மற்ற எதிரிகளை எனக்கு தெரியாது. சம்பவத்தில் இறந்த சாந்தகுமாரை தெரியும். ஞானவேல் அக்காவிற்கு சக்திவேலுக்கு தொடர்பு இருந்து வந்தது. இது குறித்து 1வது எதிரி ஞானவேல் மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து இருந்தார். சக்திவேலுக்காக சாந்தகுமார் துணையாக நின்றார். 05.07.2020 ஆம் தேதி நான் திருக்கோவிலூருக்கு கோவில் வேலையாக சென்று இருந்த போது சாந்தகுமாரின் தம்பி கார்த்திக் போன் மூலமாக தனது அண்ணன் சாந்தகுமாரை ஞானவேல் குத்தி விட்டதாக சொன்னார். திருவதிகை மண்டப பேருந்து நிறுத்ததில் அதுபோல் ஞானவேல் சாந்தகுமாரை குத்திவிட்டதாக சொன்னார். நான் கேள்விப்பட்டு தான் வந்தேன். நான் கடலூர் அரசு மருத்துவமணைக்கு வந்து பார்த்தேன். அங்கே சாந்தகுமார் சடலமாக கிடந்தார். மறுநாள் 06.07.2020 அன்று கடலூர் அரசு மருத்துவமணையில் என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**:

சாந்தகுமார் எனக்கு அண்ணன் மகன். போலிசார் என்னை மறுநாள் விசாரித்தார்கள். 05.07.2020 ஆம் தேதி கார்த்திக் எனக்கு போன் மூலமாக தனது அண்ணன் சாந்தகுமாரை ஞானவேல் திருவதிகை மண்டப பேருந்து நிறுத்ததில்

கத்தியில் குத்தியதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். எனது பெயர் தகப்பனார் பெயர் மற்றும் விலாசம் போலிசாருக்கு யார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. இறந்து போனவர் எனது அண்ணன் மகன் என்பதால் இறப்பு பற்றி கார்த்திக் என்னிடம் சொன்னதாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct*
*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 59 of 2022**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.6**

Defence

Court

| | |
|---|---|
| Name | **சதீஷ்** |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | **இந்து** |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Wednesday the 8th day of October 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Wednesday the 8th day of October 2025.**

**2 வது எதிரி இறந்து விட்ட காரணத்தினால் குற்றம் அற்றுபோய் விட்டது. 3 வது எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.**

**முதல்விசாரணை**:

நான் பண்ருட்டி, திருவதிகை கிராமத்தில் வசிக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகள் ஊர்க்காரர்கள் என்பதால் தெரியும். சம்பவத்தில் இறந்த சாந்தகுமார் என்பவரை தெரியும். சாந்தகுமாரை ஞானவேல் கொலை செய்ததாக எனக்கு தெரியும். கடந்த 06.09.2020 ஆம் தேதி மண்டப தெரு வழியாக காலை 6.00 மணியளவில் நான் சென்ற போது துணை கண்காணிப்பாளர் மண்டப பேருந்து நிறுத்தம் அருகே 4 சாலை சந்திப்பில் பார்வையிட்டு வரைப்படம் தயார் செய்துக்கொண்டிருந்தார்கள். போலிசார் அங்கே யாருடைய வீடுகள் உள்ளன என்று என்னிடம் கேட்டு தெரிந்துக்கொண்டார்கள். அதை வைத்து வரைப்படம் தயார் செய்தார்கள். அவர் தயார் செய்த பார்வை மகஜரில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். **காண்பிக்கப்பட்ட பார்வை மகஜர் அதசாஆ 2 ஆகும்.** இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**:

நான் குடியிருப்பது எடப்பாளையத் தெரு என்றால் சரிதான். மண்டப பேருந்து நிறுத்ததிற்கும் எடப்பாளையத் தெருவிற்கும் 100 மீட்டர் தொலைவு இருக்கும். நான் அங்கே சென்ற போது 4 நபர்கள் இருந்தார்கள். மண்டப பேருந்து நிறுத்தம் அருகே 6 வீடுகள் உள்ளன. ஆறுமுகம், வெங்கட்ராமன், கோபி, சேகர், சக்கரவர்த்தி வீடுகள் உள்ளன. பழனியின் காலிமனை உள்ளது. ஏற்கனவே இருந்த 4 நபர்களை விட்டு

விட்டு போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். கையொப்பம் வாங்கிய பிறகு போலிசார் அன்றையதினமே என்னை விசாரித்தார்கள். கையொப்பம் செய்த பிறகு என்னை விசாரித்தார்கள். சாந்தகுமார் எனது சித்தப்பா மகன் ஆவார். சாந்தகுமார் இறந்த சம்பவம் நான் கேள்விப்பட்டது என்றால் சரிதான். சாந்தகுமார் உறவினர் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் நானும் உறவினர் தான். சாந்தகுமாரின் நெருங்கிய இரத்த உறவில் உள்ள உறவினர் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் தற்செயலாக சென்ற சமயத்தில் போலிசார் என்னிடம் சாட்சியாக கையொப்பம் வாங்கினார்கள். நான் பண்ருட்டி காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. வெள்ளை பேப்பரில் என்னிடம் கையொப்பம் வாங்கி பின்னிட்டு எழுதிக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. பார்வை மகஜரில் சம்பவ இடமாக சொல்லப்பட்ட இடத்தில் போலிசார் விசாரித்த போது அதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்று போலிசாருக்கு தெரிய வந்து சாந்தகுமாரின் தம்பி கார்த்திக் என்னை போலிசாரிடம் அழைத்து சென்று கையொழுத்து வாங்கினார்கள் என்றாலும் தற்போதும் கார்த்திக் சொல்லி தான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct*

*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*